**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**STC.No. 8287/14**

Date. 11.08.2025

பெயர்: ஆறுமுகம் த/பெ.

வழக்கு சாட்சி. அ.சா.1

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய 1ம் எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும், சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. எனவே 1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

**4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகாரில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். 4ம் எதிரியை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். என் மனைவி பெயரில் உள்ள நிலம் சம்பந்தமாக 4வது எதிரிக்கும், என் மனைவிக்கும் அசல் வழக்கு எண். 537/2008 என்ற வழக்கு ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் நடந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது 4ம் எதிரிக்கு சார்பாக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் மீது AS.NO.162/2018 என்ற மேல்முறையீடு வழக்கு ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

2. 4ம் எதிரி என் மீது நில மோசடி சம்பந்தமாக தனிநபர் புகார் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு CC.753/2010 என்ற வழக்கு விசாரணை நடைபெற்று அதில் நான் விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் மீது 4ம் எதிரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு தற்சமயம் அது நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட வழக்கு சம்பந்தமான ஆவணங்களை யார் வேண்டுமானாலும்

நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெறலாம் என்றால் பெறமுடியாது. அவ்வாறு பெறலாம் என்றும், மேலும் வழக்கறிஞரிடமிருந்தும் பெறலாம் என்றும், சொன்னால் சரியல்ல.

3. இவ்வழக்கில் 4ம் எதிரி 1ம் எதிரிக்கு இவ்வழக்கு சம்பந்தமாக 4ம் எதிரி கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்களை 4ம் எதிரி தான் கொடுத்தார் என்பதை குறிப்பாக என்னுடைய புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றும், தற்சமயம் 4ம் எதிரிதான் 1ம் எதிரிக்கு கொடுத்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் எந்த ஆவணங்களையும் 1ம் எதிரிக்கு எப்பொழுதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 4ம் எதிரிக்கும் 1ம் எதிரிக்கும் எப்போதும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்படி சங்கதி குறித்து என்னுடைய புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

4. 1ம் எதிரிக்கும், தனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், எந்தவித ஆவணங்களையும் கொடுக்கவில்லை என்றும், 4ம் எதிரி தன்னுடைய பதில் அறிவிப்பில் தெரிவித்துள்ளார் என்றால் அது பொய்யாகும். டீக்கடையில் வைத்து 4ம் எதிரி போர்முரசு என்ற பத்திரிகையை காண்பித்ததாக கூறியுள்ள நிலையில் எந்த டீக்கடையில் வைத்து காண்பித்தார் என்றோ, அது யாருக்கு சொந்தமானது என்றோ, அந்த கடையில் போர்முரசு என்ற பத்திரிகை வாங்கப்படுவதாகவோ, என்னுடைய புகாரில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

5. நான் சொல்வதுபோல் டீக்கடை எதுவும் இல்லை என்பதாலும் அங்கு 4ம் எதிரி எந்தவிதமான போர்முரசு பத்திரிக்கையை யாருக்கும் காண்பிக்கவில்லை என்பதாலும், அது பற்றிய விவரத்தை புகாரில் நான் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 4ம் எதிரி சொன்னதாக புகாரில் கூறப்படும் சங்கதிகள் அனைத்தும் பொய்யானது அல்ல என்றால் சரியல்ல.

6. போர்முரசு பத்திரிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும், 4ம் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நிலம் சம்பந்தமாக எனது மனைவிக்கும், 4ம் எதிரிக்கும் இடையே உள்ள வழக்கு சம்பந்தமாக ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக 4ம் எதிரியை பழிவாங்கவேண்டி எனக்கு வேண்டிய சாட்சிகளின் உதவியோடு 4ம் எதிரிக்கு எதிராக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் முருகேசன் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக பொய்யான புகார் அளித்து அதன் அடிப்படையில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் எதிரி எவ்விதமான போர்முரசு பத்திரிக்கையை யாருக்கும் காட்டவில்லை என்றும், போர்முரசு பத்திரிக்கை எதுவும் 4ம் எதிரி வசம் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

8. 4ம் எதிரி எவ்வதிமான போர்முரசு பத்திரிக்கையின் நகல்களை மேற்படி சாட்சிகளிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 4ம் எதிரிக்கும் போர்முரசு பத்திரிக்கையில் வெளிவந்த செய்திக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 4ம் எதிரியின் நடவடிக்கையால் எனக்கு மன உளைச்சலோ, கஷ்டமோ ஏற்பட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2025.08.11 17:13:54 +0530

Judicial Magistrate No.III,

Erode.